[பேராசிரியர் க. அன்பழகன்] [2010 மார்ச் 19

செய்வதால், ஏற்படும் மொத்தச் செலவுத் தொகை, மாநில அரசின் சொந்த வரி வருவாயில் 33 விழுக்காடு என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மகளிர் நலன்

82. தமிழ்நாட்டில் உள்ளாட்சி மன்றங்களில் மகளிருக்கு இட ஒதுக்கீட்டை இந்த அரசு நடைமுறைப்படுத்தியதைத் தொடர்ந்து பாராளுமன்றத்திலும், சட்டமன்றப் பேரவைகளிலும் பெண்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என்ற நமது நீண்டகாலக் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், பாராளுமன்றத்திலும் சட்டப் பேரவைகளிலும் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்க வகை செய்யும் அரசியல் சட்டத் திருத்த முன்வடிவை மத்திய அரசு உறுதியுடன் மாநிலங்களவையில் தாக்கல் செய்து நிறைவேற்றியதற்கு இந்த அரசின் மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) "மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் ஆதரவும் ஆலோசனையும் மட்டும் இல்லாமல் இருந்திருந்தால் இந்தச் சட்டமுன்வடிவை இயற்ற முடிந்திருக்காது" என (மேசையைத் தட்டும் ஒலி) அண்மையில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவராகிய திருமதி சோனியா காந்தி அவர்கள் நமது முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசியல் சட்டத் திருத்த முன்வடிவு மிக விரைவில் மக்களவையிலும் நிறைவேற்றப்படும் என உறுதியாக நம்புகிறோம்.

83. ஏழை, எளிய குடும்பங்களைச் சேர்ந்த மகளிருக்கு வழங்கும் திருமண நிதி உதவியான மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ், இந்த நான்காண்டுகளில் 2 இலட்சத்து 92 ஆயிரம் மகளிர், ரூபாய் 520 கோடி அளவுக்கு நிதியுதவி பெற்றுள்ளனர். இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உதவித்தொகை இந்த அரசால் 2006-2007 ஆம் ஆண்டில் 10,000 ரூபாயிலிருந்து 15,000 ரூபாயாகவும், 2008-2009 ஆம் ஆண்டில் 20,000 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. ஏழை மகளிர்க்கு வாழ்வளிக்கும் இத்திட்டத்தில் அளிக்கப்படும் தொகையை மேலும் உயர்த்தி 25,000 ரூபாயாக வரும் நிதியாண்டிலிருந்து வழங்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

2010 மார்ச் 19] [பேராசிரியர் க. அன்பழகன்]

இத்திட்டத்திற்கு வரும் நிதியாண்டில் ரூபாய் 300 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கருவுற்ற தாய்மார்களுக்கு நிதியுதவி அளிக்கும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ், கடந்த நான்காண்டுகளில் 19 இலட்சம் மகளிர், தலா ரூபாய் 6,000 வீதம் ரூபாய் 1,000 கோடி அளவுக்கு நிதியுதவி பெற்றுள்ளனர். வரும் நிதியாண்டில் இத்திட்டத்திற்காக ரூபாய் 360 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், கருவில் உள்ள குழந்தையின் மூளை வளர்ச்சிக்கு இன்றியமையாததான அயோடின் சத்து கருவுற்ற பெண்களுக்குக் கிடைத்திடும் வகையில், அவர்களுக்கு தமிழ்நாடு உப்புக் கழகம் மூலமாக அனைத்து நியாயவிலைக் கடைகளிலும், அயோடின் கலந்த உப்பு (Iodised Salt) இலவசமாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

84. சமையல் எரிவாயு இணைப்பு இல்லாத ஏழைக் குடும்பங்களுக்கு இலவச எரிவாயு அடுப்பும், சமையல் எரிவாயு இணைப்பும் வழங்கும் திட்டத்தின்கீழ் ரூபாய் 381 கோடி செலவில், இதுவரை 17 இலட்சம் குடும்பங்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தின்கீழ் வரும் நிதியாண்டில் மேலும் 6 இலட்சம் குடும்பங்கள் பயனடையும் வகையில் ரூபாய் 140 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-45

85. கடந்த நான்காண்டுகளில் 17 இலட்சத்து 12 ஆயிரம் மகளிரைக் கொண்டு 1,11,728 புதிய மகளிர் சுய உதவிக் குழுக்கள் தொடங்கப்பட்டுள்ளன. சுழல் நிதியாக, 2 இலட்சத்து 29 ஆயிரம் சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 229 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்த அரசு எடுத்த பெருமுயற்சியின் பயனாக, தமிழகத்தில் இயங்கிவரும் சுய உதவிக் குழுக்கள், ரூபாய் 5,990 கோடி வங்கிக் கடனைப் பெற முடிந்தது. வரும் நிதியாண்டில் மேலும் 50,000 புதிய மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்படும். குறிப்பாக நகரங்களில் குடிசைப் பகுதிகளில் குறைந்த அளவிலேயே மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளதால், வரும் நிதியாண்டில் நகர்ப்புறங்களில் உள்ள குடிசைப் பகுதிகளில் வாழும் மகளிரைக் கொண்ட சுய உதவிக் குழுக்கள் அமைப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படும். இதைப் போன்றே ஊரகப் பகுதிகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தில் பங்கேற்கும் ஏழை மகளிரைக் கொண்ட சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும்.